சென்னையில் 2-ம் கட்டத்தில்:

# மெட்ரோ ரெயில் கட்டுமானத்திற்கு 4 நிறுவனங்களுக்கு பணி ஆணை

## கொரோனா பரவல் வீரியம் குறைந்ததும் பணிகளை தொடங்க திட்டம்

சென்னை, மே.20-

சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் கட்டுமானத்திற்காக 4 நிறுவனங்களுக்கு பணி ஆணையை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வழங்கி உள்ளது. கொரோனா பரவல் வீரியம் குறைந்ததும் பணிகளை தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

### மெட்ரோ ரெயில்

சென்னையில் 2 வழித்தடங்களில் சுமார் 55 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடந்து வருகிறது. பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை தொடர்ந்து, தற்போது 2-வது கட்டமாக 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகளை கடந்த ஆண்டு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்தப்பணிகள் அனைத்தும் ரூ.69 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இதில் 119 கிலோ மீட்டர் தூரத்துக்கு 128 ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடக்க இருக்கிறது.

### பூந்தமல்லி - கலங்கரை விளக்கம்

மெட்ரோ ரெயில் திட்டத்தில் 2-ம் கட்டத்தில் முதல் வழித்தடமாக பூந்தமல்லி-கலங்கரை விளக்கம் வரை மொத்தம் 26 கிலோமீட்டர் தூரத்துக்கு ரெயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் 18 ரெயில் நிலையங்கள் உயர்த்தப்பட்ட பாதையிலும், 12 ரெயில் நிலையங்கள் சுரங்கப் பாதையிலும் அமைக்கப்படுகிறது. குறிப்பாக கலங்கரை விளக்கம், பட்டினம்பாக்கம், ஆழ்வார்பேட்டை, நந்தனம், கோடம்பாக்கம், சாலிகிராமம், வளசரவாக்கம், போரூர், பூந்தமல்லி ஆகிய பகுதிகளில் ரெயில் நிலையங்கள் வர உள்ளன.

2-ம் வழித்தடம், மாதவரம்-சோழிங்நல்லூர் இடையே மொத்தம் 47 கிலோமீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட உள்ளன. இதில் 41 கிலோ மீட்டர் உயர்த்தப்பட்ட பாதையிலும், 6 கிலோ மீட்டர் சுரங்கப் பாதைவழித்தடங்கள் அமைய உள்ளன. இதில் மாதவரம், ரெட்டேரிசந்திப்பு, வில்லிவாக்கம், கோயம்பேடு, போரூர் சந்திப்பு, ஆலந்தூர், மேடவாக்கம், பெரும்பாக்கம், எல்காட், சோழிங்கநல்லூர் உள்ளிட்ட பகுதிகள் மெட்ரோ ரெயில் போக்குவரத்துடன் இணைக்கப்பட உள்ளன. இந்த வழித்தடத்தில் மொத்தம் 47 ரெயில் நிலையங்கள் வரவுள்ளன.

### மாதவரம் - சிறுசேரி சிப்காட்

மெட்ரோ ரெயிலின் 2-ம் கட்ட திட்டத்தில் 3-வது வழித்தடமாக மாதவரம் - சிறுசேரி சிப்காட் வரை 45 கிலோமீட்டர் தொலைவுக்கு ரெயில் பாதைகள் அமைக்கப்படுகிறது. இதில் 26 கிலோமீட்டர் தொலைவுக்கு சுரங்கப் பாதையிலும், 19 கிலோமீட்டர் தூரத்துக்குமேம்பாலத்திலும்ரெயில்கள் இயக்கப்படவுள்ளன.

இந்தவழித்தடத்தில்மொத்தம் 49ரெயில்நிலையங்கள் வரவுள்ளன. குறிப்பாக மாதவரம், பெரம்பூர், அயனாவரம், புரசைவாக்கம், நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு, ராயப்பேட்டை, அடையாறு, திருவான்மியூர், பெருங்குடி, செம்மஞ்சேரி, சிறுசேரிசிப்காட் உள்ளிட்ட இடங்கள் மெட்ரோ ரெயில் நிலையங்கள் வர உள்ளன. இந்த நிலையில் பணிகளை செயல்படுத்துவதற்கான கட்டுமானத்திற்கான ஆணைகள் தற்போது வழங்கப்பட்டு உள்ளது.

### 4 நிறுவனங்களுக்கு அனுமதி

இது குறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

மெட்ரோ ரெயிலின் 2-ம் கட்ட பணிக்கு மண் ஆய்வு உள்ளிட்ட ஆரம்பகட்டப்பணிகள் நிறைவடைந்து, சுரங்கம் மற்றும் உயர்த்தப்பட்ட பாதைகளுக்கான அனுமதிகள் 4 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. அதில் 3-வது வழித்தடமான மாதவரம்- சிறுசேரி பாதையில் உள்ள வேணுகோபால் நகர் முதல் கெல்லீஸ் வரை 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 சுரங்கப்பாதைகள் (18 கிலோ மீட்டர்) அமைப்பதற்கான அனுமதி டாடா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு உள்ளது.

அதேபோல் பவர் ஹவுஸ் முதல் போரூர் ஜங்சன் வரை 7.9 கிலோ மீட்டர் தூரத்துக்கு உயர்த்தப்பட்ட பாதை மற்றும் கெல்லீஸ் முதல் தரமணிரோடு வரை 12 கிலோ மீட்டர் தூரம் கொண்ட சுரங்கப்பாதை அமைக்கும் பணி எல்.அண்டு. டி. நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு உள்ளது.

இதேபோல் சென்னை புறவழிச்சாலையில் இருந்து பூந்தமல்லி புறவழிச்சாலைவரை 7.9 கிலோ மீட்டர்தூரம்கொண்ட பாதை அமைக்க எச்.சி.சி.டி மற்றும் கே.இ.சி. சர்வதேச நிறுவனத்துக்கு பணி செய்ய அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் தற்போது கொரோனா நோய் பரவல் காரணமாக பணிகளை தொடங்குவதிலும் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இருந்தாலும் நோய் பரவலின் வீரியம் குறைந்த உடன் பணிகள் தொடங்கப்படும். பணிகள் தொடங்கி 3 ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.